# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM

| | | |
|---|---|---|
| Calender | : | STC .NO. 66/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முக சுந்தரம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்புசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | பாரவலசு | இனம் | : | |
| தாலூக்கா | : | காங்கயம் | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.11.2023.

**குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தாயார் பெயர் பழனாத்தாள். எதிரியின் தாயார் பெயர் சரஸ்வதி, இருவரும் உடன் பிறந்த சகோதரிகள், மேற்படி பழனத்தாள், சரசுவதியுடன் பிறந்தவர்கள் முத்துசாமி, பழனிசாமி என்றால் சரிதான். மேற்படி நான்கு நபர்களுக்கும் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் கொழுமங்குழி, முதலி பாளையம் கிராமத்தில் இருந்தது என்றால் சரிதான். என் தாயார் பழனாத்தாளுக்கும், எதிரியின் தாயார் சரசுவதியும் கூட்டாக கிரைய பெற்ற சொத்துக்கள் சூரியநல்லூர் கிராமத்தில் இருந்தது என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் குறித்து எனது மாமா பழனிசாமி, முத்துசாமி, மற்றும் எதிரியின் தாயார் சரசுவதி ஆகியோர் சொத்துக்களை பிரித்து

கொடுக்க மறுத்ததால் நானும், எனது தாயாரும் காங்கயம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 95/2009 வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரி, எதிரியின் தாயார் சரசுவதி ஆகியோருக்கு எதிராக நான் வழக்கை தாக்கல் செய்து 5, 6 வருடங்கள் வழக்கு நடந்து வந்தது என்றால் சரிதான்.

2. சூரியநல்லூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களில் எனது தாயார் பழனாத்தாளுக்கும், எதிரியின் தாயார் சரசுவதிக்கும் சரிபாதி சொத்து இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை எதிரியின் தாயார் எதிரியுடன் சேர்ந்து கொண்டு பிரித்து கொடுக்க மறுத்துவந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள அ.வ.எண் 95/2009 வழக்கானது 5, 6 வருடங்களுக்கு பின்னிட்டு பைசல் காரர்கள் மூலம் பைசல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பைசலில் எனக்கும், எனது தாயாருக்கு 4–1/2 ஏக்கரும், எதிரியின் தாயாருக்கும் 4–1/2 ஏக்கருக்கும் பைசலில் முடிக்கப்பட்டு சூரியநல்லூர் கிராமத்தில் எனது தாயாருக்கு உள்ள பங்கை எதிரியின் தாயாருக்கே விட்டுகொடுத்துவேண்டியது என முடிவு செய்யப்பட்டதன் பேரில் அ.வ.எண் 95/2009 வழக்கில் பைசலில் எனது தாயாருக்கு 6 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால், எங்களுக்கு பள்ளமான பூமியை ஒதுக்கியதால் 6 ஏக்கர் ஒதுக்கப்பட்டது.

3. எதிரியின் தாயாருக்கு 3 ஏக்கர் ஒதுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 25.07.2016 ம் தேதி சூர்யநல்லூர் கிராமத்தில் எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட பொது பாத்திய சொத்துக்களுக்கு எதிரியின் தாயாருக்கு ஒரு பாக பாத்தியம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் உண்மை தான், ஆனால் தேதி எனக்கு தெரியவில்லை. சூர்யநல்லூர் கிராமத்து சொத்தை என் தாயார் விடுதலை கொடுத்ததால் தான் பூர்வீக சொத்தில் எங்களுக்கு 1–1/2 ஏக்கர் அதிகமாகவும், எதிரியின்

தாயாருக்கு 1–1/2 ஏக்கர் குறைவாகவும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சூர்யநல்லூர் கிராமத்து சொத்துக்களையும், பூர்வீக சொத்துக்களையும் பைசல் செய்து பங்கீட்டதில் எங்கள் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் பெருத்த மனவருத்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சூர்யநல்லூர் கிராமத்து சொத்துக்கள் விலைமதிப்பு மிக்க பூமி என்றால் நான் தோட்டத்திற்கே சென்றது இல்லை, அதனால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. பூர்வீக சொத்துக்கள் மதிப்பு குறைவான பகுதி என்றால் சரியல்ல. என் தாயார் நல்ல பூமியை எதிரியின் தாயாருக்கு கொடுத்துவிட்டு விலைமதிப்பு குறைவான பூமியை என் தாயார் பெற்றுக் கொண்டதால் எங்கள் இருகுடும்பத்திற்கும் இடையே மனவருத்தம் இருந்தது என்றால் சரியல்ல. அந்த சிவில் வழக்கை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு மனவருத்தத்துடன் இருந்து வந்ததால் இரு வீட்டு விசேசங்களில் ஒருவருக்கொருவர் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் ஐடிபிஐ வங்கி, காங்கயம் கிளையில்வரவு செலவு வைத்துள்ளேன். நான் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல்செய்த தேதியில் எனது வங்கி கணக்கில் ரூ.471.85/– மட்டும் தான் இருப்பாக இருந்துள்ளது என்றால் சரிதான், நிரந்தர வைப்பீட்டு தொகையாக ரூ.5,00,000/– வைப்பீடு செய்திருந்தேன்.

5. அந்த நிரந்தர வைப்பீட்டு தொகைக்காக வங்கியால் வழங்கப்பட்ட பாண்டு என் கை வசம் உள்ளது. அந்த பாண்டை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. எனக்கு எந்த வங்கியிலும் வைப்பீடு எதுவும் கிடையாது என்றால் இந்தியன் வங்கியில் ரூ.3,00,000/– நிரந்தர வைப்பீடாக உள்ளது. இந்தியன் வங்கியில் நிரந்தர வைப்பீடு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

எனக்கு நிரந்தர தொழிலோ, வருமானமோ இல்லை என்றால் சரியல்ல, தென்னந்தோப்பு, 100–செம்மறி ஆடுகள் வைத்துள்ளேன். அவ்வாறு எனது பெயரில் சொத்துக்கள் உள்ளதை என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைபட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் 100 செம்மறி ஆடு வைத்திருப்பதாக சொல்வது சரியல்ல.

6. 2018 ஜனவரி மாதத்தில் இருந்து பெங்களூர் கேசவன் ஹல்லில் உள்ள ரஷ்யா பவுண்டேசனில் குடியை மறுப்பதற்காக சிகிச்சை எடுத்து தற்போதும் தொடர் சிகிச்சையில் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி கட்டும் நபர் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு எனக்கு வருமானம் வந்திருந்தால் நான் வருமான வரி செலுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. ஐடிபிஐ வங்கியில் எனக்கு விவசாய கடன் உள்ளது என்றால் சரிதான். இந்தியன் வங்கியில் எனக்கு நகை கடன் உள்ளது என்றால் சரிதான்.

7. நான் மதுவை மறப்பதற்கு முயற்சி செய்து கொண்டு எந்த தொழிலும் செய்யாமல் வங்கியில் கடன் வாங்கி பிழைப்பு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 கலெக்சன் சலானில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள வாசகங்கள் வங்கியில் இருந்த ஒருநபர் எனக்கு பூர்த்தி செய்து கொடுத்தார். அந்த வங்கி சலானை பூர்த்தி செய்த நபர் தான் வழக்கு காசோலையையும் பூர்த்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல, எதிரி பிரகாஷ் தான் பூர்த்தி செய்தார். எனது புகார் மற்றும் முதல் விசாரணையிலும் வழக்கு காசோலையை எதிரி நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறவில்லை என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–C. செந்தில்குமார்
நீதித்துறை நடுவர்,
காங்கயம்.